THNH 2016-17 (Round 2) – Original Target
AAVAAZ

<u>சுருக்கம்</u>

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ் 30.08.2016 ஆம் நாளிட்ட அறிவிப்பு – தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள், 2016–2017 – நேரடியாக பிறருடன் பேசி தொடர்பு கொள்ள இயலாத நிலையில் உள்ள மூளை முடக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட, புற உலக சிந்தனை இல்லாத மற்றும் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகள் மாற்று வழியில் பிறருடன் தொடர்பு கொள்ள உதவும் வகையில் பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட கணினி மென்பொருளுடன் கூடிய உபகரணம் (AAVAAZ) வழங்க ரூ.106.46 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நலத்(மா.தி.ந.2.1) துறை

அரசாணை (நிலை) எண்.38

நாள்: 01–12–2016
துன்முகி–கார்த்திகை 16,
திருவள்ளுவர் ஆண்டு, 2047

படிக்கப்பட்டது:

செயலர் திட்டக்குழு, சென்னை
0 3 சன 2017
000010

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, பேரவை விதி எண்.110ன் கீழ் அறிவிப்பு.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், ந.க.எண்.2865/இவாததி/2016, நாள் 30.06.2016 மற்றும் 31.08.2016.

-----

<u>ஆணை:</u>

30.08.2016 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ், தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏனையவற்றினுள் கீழ்க்காணும் அறிவிப்பு செய்துள்ளார்கள்:-

> "புற உலக சிந்தனையற்றோர், மூளை முடக்குவாதம், நுண்ணறிவு திறன் மற்றும் மரபு வழி குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் பேச்சு மற்றும் மொழி திறனை மேம்படுத்திடும் வகையில் மாற்று தகவல் பரிமாற்ற முறை செயல்படுத்தப்படும். இத்தகைய சிறப்பு குழந்தைகள், படங்கள் மற்றும் இதர மாறுபட்ட முறைகளில் மற்றவர்களுடன் கலந்துரையாட பயிற்சி அளிக்கப்படும்''.

இத்திட்டத்தின்படி தொடு திரையுடன் "ஆவாஸ்" AAVAAZ என்னும் சிறப்பு மென்பொருளுடன் கூடிய கையடக்க கணினி i-Pad மூலம் சிறப்பு குழந்தைகளிடமுள்ள தகவல் பரிமாற்ற குறைபாடு களையப்படும். மேலும், சிறப்பு குழந்தைகள் வகுப்பறையில் துடிப்புடனும் மிகவும் திறமையுடனும் கல்வி கற்கவும், மற்றவர்களுடன் உரையாடவும் இத்திட்டம் பயனளிக்கும். முதல்கட்டமாக இந்த சிறப்பு வசதிகள் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் நடமாடும் சிகிச்சை பிரிவுகள் மூலம் பயனடையும் குழந்தைகள் மற்றும் சிறப்பு பள்ளிகளில் பயிலும் 416 குழந்தைகளுக்கு வழங்கப்படும்."

[த.பி.பா]

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள், செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் மற்றும் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு, அவர்களின் தேவைக்கு ஏற்றவாறு பல்வேறு வகையான உதவி உபகரணங்களும், கல்வி உபகரணங்களும் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகின்றன என்றும், ஆனால், இது நாள் வரை மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், புற உலகு சிந்தனையற்ற குழந்தைகள், பேச்சில் குறைபாடுடைய குழந்தைகள் பயன்படுத்தக்கூடிய உபகரணங்கள் வழங்கப்படவில்லை என்றும், மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு பேசுவதில் காணும் பிரச்னைகள் காரணமாக மற்றவர்களைத் தொடர்பு கொள்ள முடியாமல் போகிறது என்றும், பேச்சில் குறைபாடுடைய குழந்தைகள் மற்றவர்களுடன் நேரடியாக உரையாட இயலாமல் உள்ள சூழலில் மற்றவர்களுடன் மாற்று வழியில் தொடர்பு கொள்ளும் திறனை மேம்படுத்தும் முறை (Alternative and Augmentative Communication) பயன்படுத்தப்படுகிறது என்றும், இதன் மூலம் குழந்தைகள் தங்கள் தேவை மற்றும் விருப்பங்களை சுலபமாக பிறரிடம் வெளிப்படுத்தலாம் என்று தெரிவித்துள்ளார்.

3. மேலும், குழந்தைகளின் வசதிக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட கணினி மென்பொருள் ஒன்று ipadல் பொருத்தப்பட்டுள்ளது என்றும், ipadல் உள்ள தொடு திரை மூலமாக அனைத்து தேவைகளுக்கும் மற்றவர்களை எளிதில் தொடர்பு கொள்ளலாம் என்றும், இதன் மூலம் மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் புற உலகு சிந்தனையற்ற இவர்களுடைய சிறப்புக் கல்வி மற்றும் பயிற்சியில் சிறந்த முன்னேற்றம் ஏற்படும் என்றும், இவர்கள் பிறருடன் கருத்துப் பரிமாற்றம் செய்வதில் சுயமான முன்னேற்ற நிலையை அடைவார்கள் என்றும், இந்த வசதிகளை ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள், நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனங்கள் மற்றும் பயிற்சி மையங்களில் அறிமுகப்படுத்தலாம் என்றும், மேலும் முதற்கட்டமாக 2016–17 ஆம் நிதியாண்டிற்கு ரூ.100.09 இலட்சம் செலவில் 391 மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் புற உலகு சிந்தனையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு tablet with software (AAVAAZ) என்ற வசதிகளை வழங்கலாம் என்றும், மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் புற உலகு சிந்தனையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு tablet with software (AAVAAZ) வழங்க ரூ.100.09 இலட்சம் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

| விவரம் | ஒன்றின் விலை | எண்ணிக்கை | மொத்த தொகை |
|---|---|---|---|
| Avaz for ipad India edition, including Avaz software license (per use) ipad Mini 16GB with WiFi Tamil Language software with English and other language support Free upgrades for 1 year Email support Telephone support (English, Hindi and Tamil) case | Rs.25,000/- | 391 x Rs.25,000/- | Rs.97,75,000/- |
| Cost towards communication Kit | Rs.500/- | 391 x Rs.500/- | Rs.1,95,500/- |
| Regional Level Training Programme – one day at seven places | Rs.5,500/- | 7 places x Rs.5,500/- | Rs.38,500/- |
| Total | | | **Rs.1,00,09,000/-** |

[த.பி.பா]

4. 30.08.2016 அன்று நடைபெற்ற சட்டமன்றப் பேரவையில், பேரவை விதி எண்.110–ன் கீழ், தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை தொடர்ந்து மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, நேரடியாக பிறருடன் பேசி தொடர்பு கொள்ள இயலாத நிலையில் உள்ள மூளை முடக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட, புற உலக சிந்தனை இல்லாத மற்றும் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகள் மாற்று வழியில் பிறருடன் தொடர்பு கொள்ள உதவும் வகையில் பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட கணினி மென்பொருளுடன் கூடிய உபகரணம் (AAVAAZ) 416 மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு வாங்கி வழங்க, 2016–2017 ஆம் ஆண்டில் தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின் கீழ் ரூ.106.46 இலட்சம் (ரூபாய் ஒரு கோடியே ஆறு இலட்சத்து நாற்பத்தாறாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

5. மேலே பத்தி 4ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

| | | |
|---|---|---|
| 1. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் – 101 மாற்றுத் திறனாளிகள் நலன் பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் –II மாநிலத் திட்டம்–MZ மாநில புதுமை நிதியின் கீழ் பெருமூளை வாத நோயினால் பாதிக்கப்பட்டோருக்கான மேம்படுத்தப்பட்ட மற்றும் மாற்று தகவல் தொடர்பு முறை – 24 பொருள்களும் வழங்கலும். (த.தொ.கு.2235–02–101–MZ-2405) | ரூ.106,08,000/– |
| 2. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் – 101 மாற்றுத் திறனாளிகள் நலன் பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் –II மாநிலத் திட்டம்–MZ மாநில பொதுமை நிதியின் கீழ் பெருமூளை வாத நோயினால் பாதிக்கப்பட்டோருக்கான மேம்படுத்தப்பட்ட மற்றும் மாற்று தகவல் தொடர்பு முறை – 72 பயிற்சி. (த.தொ.கு.2235–02–101–MZ-7204) | ரூ.38,000/– |

6. மேலே பத்தி 4–ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் மாநில புதுமை நிதியிலிருந்து திரும்பப்பெற கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் சரிகட்ட வேண்டும்.

2235–சமூக பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்–902– கழிக்கவும்–தமிழ்நாடு சிறப்பு நல நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை–JA– கழிக்கவும்– மாநில புதுமை நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை–30–00–கணக்குகளிடையே மாற்றம். [த.தொ.கு.2235–02–902–JA–3007]

எதிர் பற்று கீழ்கண்ட கணக்கில் வைக்கப்பட வேண்டும்.

J- சேமநிதிகள் (b) வட்டிபெறாத சேமநிதிகள் – 8229–00–வளர்ச்சி நல நிதிகள் – 200–ஏனைய வளர்ச்சி நல நிதிகள் – BE–மாநில புதுமை நிதி. [DPC: 8229-00-200-BE-0006] Out go.

7. மேலே பத்தி–4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.6,37,000/–, '2235–02–101–MZ-7204' என்ற கணக்குத் தலைப்பின் கீழ், 2016–17 ஆம் ஆண்டிற்கான திருத்திய / இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் வழங்கப்படும். அவ்வாறு வழங்குவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகிறது. 2016–17 ஆம் ஆண்டிற்கான

[த.பி.பா]

திருத்திய / இறுதி திருத்திய நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதித் துறைக்கு அனுப்பிடும் பொழுது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்பிடுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண்.57539/நிதி(சுந)/2016, நாள் 28.11.2016 பெறப்பட்ட இசைவுடன் மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1441 (ஆயிரத்து நானூற்று நாற்பத்து ஒன்று) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18 (பெயரில்)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளி நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

நகல்:
மாநில திட்டக் குழு, சேப்பாக்கம், சென்னை–5.
நிதி(சுந/வ.செ.பொ.–II)த் துறை, சென்னை–9.
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர்(சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ./உ.ந.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.